[1992 மார்ச் 24]

319—

சிறுசேமிப்பை ஊக்குவிக்க முகவர்களுக்கு வருமான வரி விலக்கு

* 2673 — திரு. சோ. இராசாராமன்:

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) சிறு சேமிப்பை ஊக்குவிப்பதற்காக முகவர்களுக்கு அளிக்கப்படும் ஊக்கத்தொகை மீதான வருமான வரியில் விலக்கு அளிப்பது குறித்து மைய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை ஏதேனும் அனுப்பியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் முழு விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மைய அரசு, சிறு சேமிப்பு முகவர்கள் பெறும் மொத்த தரகுத் தொகை ரூபாய் 60,000-க்கு மிகாமல் இருந்தால், அதில் 50 சதவிகிதத் தொகையை அவர்களுடைய சிறு சேமிப்பு சம்பந்தப்பட்ட செலவினங்களுக்காக வருமானவரி விலக்களித்து ஆணை வெளியிட்டுள்ளது. சிறு சேமிப்பு முகவர்கள் வைப்புகளை திரட்டுவதற்கு செலவினங்களை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், மாநில அரசு மேற்படி முகவர்களுக்கு வழங்கும் ஊக்கத் தொகையிலும் 50 சதவிகிதம் வருமான வரி விலக்கு அளிக்கக் கோரி மாநில அரசு மைய அரசிற்கு பரிந்துரை செய்து கடிதம் ஒன்று எழுதியுள்ளது.

323—

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் மூலம் நூல்

* 405 — திரு. இரா. தாமரைக்கனி:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) காமராசர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோ-ஆப் டெக்ஸில் இருந்து நூல் கொடுக்கவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ); திருவில்லிப்புத்தூர் பகுதியில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நூல் திருவில்லிப்புத்தூர் நூல் கிடங்கின் மூலம் எவ்வித குறைபாடின்றி விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

336—

போடிநாயக்கனூரில் ஏலக்காய் ரசம் தயாரிக்கும் திட்டம்

* 3556 — திரு. தேனி பன்னீர்செல்வம்:

மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா,

(அ) போடிநாயக்கனூரில் ஏலக்காய் உற்பத்தி அதிகம் இருப்பதால், ஏலக்காய் ரசம் (Essence) தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது அரசுத் துறை மூலம் நடத்தப்படுமா? அல்லது தனியார் துறை மூலம் நடத்தப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் குறிப்பு

முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பை மீறி நிலவரி மற்றும் கடன் பாக்கிக்காக ஜப்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது குறித்து:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், தன்னுடைய தொகுதியில் அரசாங்கத்தின் அறிவிப்பை மீறி, நிலவரி வசூலுக்காக, ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக ஒரு அறிவிப்பை என்னிடத்திலே கொடுத்திருக்கிறார். அதே போன்ற அறிவிப்புகளை, திரு. ஆர். சிங்காரம்,